DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**Deposition of LW4 examined as PW4** (Related witness)

Dt. 10.06.2025

| | |
|---|---|
| Name | மோகன்தாஸ் |
| Father's/Husband's Name | கலியபெருமாள் |
| Village | கஞ்சாநகரம் |
| Taluk | |
| Age | 46/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.06.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை வருகிறேன். கடந்த 31.01.2023 ம் தேதி காலை 10.00 மணியளவில் போலீசார் வந்து கஞ்சாநகரம் ஸ்ரீராம் பென்சிங் கடைக்கு பின்புறம் உள்ள கீற்று கொட்டகை அமைந்திருக்கும் இடத்திற்கு உரிமையாளர் யார் என்று விசாரித்தார்கள் நான் தான் என்று தெரிவித்தேன். அப்பு என்கிற சத்தியசீலன் என்பவருக்கு மாத வாடகை ரூ.3000/- வீதம் வாடகைக்கு என்னை விசாரணை செய்த மாதத்திற்கு முதல் மாதத்தில் இருந்து வாடகைக்கு விட்டேன். மாவு மில் வைப்பதற்காக வாடகைக்கு இடத்தை சத்தியசீலன் வேண்டுமென்று கூறி வாங்கினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாருக்கு வாடகைக்கு விட்டீர்கள் என்று கேட்டார்கள் என்றால் சரிதான். கடை உள்ள பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி கடைத்தெரு என்றால் சரிதான். எதிர்புறம் குடியிருப்புகளும், கடைகளும் அருகில் கடைகளும் உள்ளன என்றால் சரிதான். நீங்கள் அந்த இடத்திற்கு உரிமையாளர் என்பதால் போலிசார் என்னை சாட்சியாக விசாரித்தனர் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மட்டும் தான் போலிசார் விசாரணையில் தெரிவித்தேன் என்றால் சரிதான் .

K Mohan

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

10.6.25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை